தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெ'கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்ன"சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 18-12-2014

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை த'களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நுண்ணுயிரியல் மற்றும் நச்சுயிரி ஆய்வுக்கு நல்ல எதிர்காலம் உண்டு

நவீன யுகத்தில் நச்சுயிரியின் ஆராய்ச்சி குறித்த கருத்தரங்கு துவக்க விழா தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 18-12-2014 அன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கு தொடக்க விழாவில் பல்வேறு நாட்டு விஞ்ஞானிகள், மாணவர்கள் பங்கேற்றனர்.

விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி துவக்க உரை ஆற்றினார். அவரது உரையில் வேளாண்மையில் பல்கலைக்கழகம் ஆற்றி வரும் சிறப்புகளை விரிவாக எடுத்துரைத்தார்.

கே.ஜி. மருத்துவமனை தலைவர் டாக்டர். ஜி. பக்தவசலம் சிறப்பு விருந்தினர்ராக கலந்து கொண்டு மருத்துவதுறையில் நுண்ணுயிரியல் மற்றும் நச்சுயிரி ஆய்வுகளுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதை விளக்கினார். மனிதனுக்கு உண்டாகும் வைரஸ் நோய்கள் கொழுப்பு, இரத்த சர்க்கரை மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றை இயற்கை மூலிகைகளை உட்கொள்வதின் மூலம் கட்டுப்படுத்துலாம் என வலியுறுத்தினார்.

பல்கலைக்கழக பதிவாளர், முனைவர். ர. ரபீந்திரன் அவர்கள் வரவேற்புரையாற்றி தாவர நச்சுயிரிகளின் ஆராய்ச்சியில் பல்கலைக்கழகம் ஆற்றும் ஆராய்ச்சி பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

தேசிய பேராசிரியர் அனுப்பம் வர்மா அவர்கள் கூறுகையில் இந்தியாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சிறந்த பல்கலைக்கழகமாக விளங்குகிறது என்றார், மேலும் முன்னால் முனைவர் ராமகிருஷ்ணன் நச்சுயிரியல் துறையில் அவர் ஆற்றிய பங்களிப்பினை நினைவு கூர்ந்தார்.

டாக்டர். A.K. பிரசாத் தலைவர், இந்திய நச்சுயிரியல் அமைப்பு, முனைவர்.நாராயண் ரிஷி, இயக்குனர், அமிட்டி பல்கலைக்கழகம், முனைவர்.மகேஸ்வரன், ஆராய்ச்சி இயக்குனர் மற்றும் முனைவர் கு.ராமராஜீ, பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நச்சுயிரி ஆராய்ச்சியில் பல்கலைக்கழகத்தில் சிறந்து விளங்கிய முன்னால் விஞ்ஞானிகளான முனைவர்.R. ஜெயராஜன், முனைவர் P. நாராயணசுவாமி மற்றும் முனைவர் சபிதா துரைசாமி ஆகியோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் வாழ்நாள் சாதனையாளர் விருது, தேசிய பேராசிரியர் அனுப்பம் வர்மா, டாக்டர் A.K. பிரசாத், டாக்டர். M.P. யாதவ் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. பேராசிரியர் K.S. பார்கவா விருது பேராசிரியர் நாராயண் ரிஷி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இவ்விழாவில் ஆய்வுச்சுருக்கங்களின் தொகுப்பினை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். கு.ராமசாமி வெளியிட்டார்.

இறுதியாக பயிரியல் நோய் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் D.ஆலிஸ் அவர்கள் நன்றி உரை ஆற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்